**செய்தி வெளியீடு எண்: 847** **நாள்: 18.11.2018**

**<u>இன்று (18.11.2018), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், இரும்பாலை சந்திப்பில் பாலங்கள் திறப்பு விழாவில் ஆற்றிய உரை:</u>**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

சேலம் மாநகர் இரும்பாலை சாலை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலம் மற்றும் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்கள் மற்றும் சிறு, குறு சிறப்பு அங்காடிகள் துவக்க விழா, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் சேலத்தான்பட்டில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 496 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி, மற்ற புதிய பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்றுள்ள அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில், சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரமாக இருப்பதினால் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைக்கவும் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய சேலம் மாநகர மக்கள் வழங்கிய கோரிக்கை மனுவினை, அம்மா அவர்களிடம் நான் அளித்தேன். சேலம் மாநகர மக்கள் பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள், இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறாமல் இருக்கின்றது, நீங்கள் இருக்கின்ற காலத்திலே சேலம் மாநகர மக்களுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்க வேண்டும், அந்த விடிவு காலம் உங்களால்தான் பிறக்கும், ஆகவே, அவைகளையெல்லாம் எவ்வளவு நிதி ஆனாலும் பரவாயில்லை,

நீங்கள் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டவுடனேயே 5 ரோட்டிற்கு ஒரு பாலம், ஏ.வி.ஆர் ரவுண்டானா, சிறுவாகவுண்டனூர், மணல்மேடு பாலம், பழைய சூரமங்கலம், முள்ளுவாடி போன்ற இடங்களில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ அந்த இடங்களுக்கெல்லாம் உயர்மட்டப்பாலம் கீழ்ப்பாலம் வேண்டுமென்று கேட்டபொழுது, அம்மா அவர்கள் அதற்கும் ஆணையிட்டு, உடனடியாக அதற்குண்டான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டு, இன்றைக்கு 5 ரோடு பாலம் விரைவிலே முடிவுற இருக்கின்றது. மற்ற பாலங்களான சிறுவாகவுண்டனூர் ரவுண்டானா பாலம் மற்றும் ஏ.வி.ஆர். ரவுண்டானா பாலம் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டு விட்டது.

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு.வெங்கடாசலம், சகோதரர் திரு.பன்னீர்செல்வம் அவர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப, இரும்பாலை சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட அடிக்கல் நாட்டி, 5 மாதத்திலேயே, சுமார் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளது. அரசு எந்தளவிற்கு விரைவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தப் பாலமே ஒரு சான்று.

அதுமட்டுமல்லாமல், இளம்பிள்ளை பிரிவு பகுதியில் விபத்துக்களை தவிர்க்கவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அரியானூரிலிருந்து பிரிந்து வீரபாண்டி, ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு வரை செல்லுகின்ற சாலையிலும், வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் சகோதரி மனோன்மணியம் அவர்களும், திரு.பன்னீர்செல்வம்

அவர்களும், முன்னாள் ஊராட்சி பெருந்தலைவர்களும் வைத்த கோரிக்கைகளை ஏற்று, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலையாக இருப்பதினால், மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் சென்னை வந்தபொழுது அதனை தெரிவித்தபொழுது, அரியானூர் பகுதி தவிர வேறு ஏதும் வேண்டுமா என்று அவர் கேட்டபொழுது மகுடஞ்சாவடியில் எடப்பாடி செல்கின்ற பிரிவு சாலையிலும் ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டதற்கு, உடனடியாக நான் ஒப்புதல் தந்து, இரண்டையும் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னதைப்போல, இன்றைக்கு அரியானூர் பாலத்திற்கு டெண்டர் விடப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. மகுடஞ்சாவடி பாலத்திற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது, இன்னும் ஒரு வாரத்தில ஒப்பந்தம் கோரப்படும். இரண்டு பாலங்களும் இன்னும் 5 மாதங்களில் பணிகள் நிறைவு பெற்று இதேபோல் திறப்பு விழா செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று சேலம், மாநகரத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடனும், சாலை விபத்துக்களைக் குறைத்து விலை மதிக்கமுடியாத உயிர்களை காப்பாற்றும் நோக்கத்துடனும் இந்த உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சேலம் மாவட்டத்தில் நிறைய சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாக பராமரித்திருக்கின்றோம். 8 வழிச்சாலை அமைக்க நாம் முயற்சித்தோம், பலர்

நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றார்கள், நீதிமன்ற வழக்கு முடிந்த பிறகு அந்தப் பணியும் துவங்கும். சிலர், முதலமைச்சர் ஊர் சேலமாக இருப்பதினால் 8 வழிச் சாலை அமைக்கின்றார் என்றும், சேலத்திற்கு மட்டும் 8 வழிச் சாலை அமைப்பது போலவும், அங்கு எனக்கு பத்து தொழிற்சாலையா ஓடிக்கொண்டிருப்பதுபோலவும் ஒரு தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள், 8 வழிச் சாலை பல்வேறு ஊர்களிலிருந்து சேலம் வழியாக சென்னைக்குச் செல்கிறதே தவிர, வேறு ஒரு காரணமும் இல்லை. எதிர்க்கட்சியினர் ஒரு தவறான விமர்சனத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். நாளுக்கு நாள் வாகனங்களின் எண்ணிக்கை, கனரக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற காரணத்தினால் சாலைகளின் தேவையும் அதிகரிக்கிறது. 8 வழிச் சாலை அமைப்பதினால் கிட்டத்தட்ட 70 கிலோமீட்டர் தூரம் மீதமாகிறது, அதனால், எரிபொருள் தேவை குறைகிறது. எட்டு வழிச்சாலை அமைப்பதன் மூலம், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது, பயண நேரம் குறைகிறது, வாகனங்கள் மூலம் வரும் புகைகள் தவிர்க்கப்படுகிறது, சாலைகள் விபத்து குறைகிறது. சாலைகள் கட்டமைப்பு சிறப்பாக இருந்தால்தான், புதிய புதிய தொழிற்சாலைகள் வரும் சூழல் ஏற்படும், அதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும், பொருளாதாரம் மேம்படும். இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் வரும்பொழுது வரவேற்க வேண்டும். பொதுமக்கள் தாங்களாக முன்வந்து அரசுக்கு உதவ வேண்டும். எதிர்க்கட்சிகளும் முன்வந்து இந்தத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

திமுக ஆட்சிகாலத்தில், டி.ஆர்.பாலு மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபொழுது, கிட்டத்தட்ட 700 கிலோமீட்டருக்கு மேல் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், அப்பொழுதெல்லாம் பாதிக்கவில்லையா ? ஆகவே, புதிய திட்டம் வரும்பொழுது அதிமுக–விற்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என்று சொல்லி, ஒரு

சிலபேர் தூண்டிவிடுகிறார்கள். எனவே, எட்டுவழிச்சாலை திட்டம் மிக அவசியமென்று இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அம்மாவினுடைய அரசு பதவியேற்ற பிறகு, கல்வியிலே ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்கள். **2011–ல்** மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்றபொழுது உயர்கல்வி படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை **100**க்கு **21** சதவீதமாக இருந்தது. அம்மா அவர்கள் கல்வியில் செய்த புரட்சி, உதவிகள் வாயிலாக இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் **100**க்கு **46.8** சதவீதம் உயர்கல்வி படிக்கின்றார்கள். இவை கல்வியில் செய்த புரட்சி, மறுமலர்ச்சி. அம்மா அவர்கள் **65** கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள். மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசும் **11** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. அம்மாவின் அரசு கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு அளித்து, தமிழகத்திலே நம்முடைய மாணவ, மாணவிகள் விஞ்ஞான கல்வியை பெறவேண்டும் என்ற நோக்கத்தில் இதுவரை மாண்புமிகு அம்மாவின் அரசால் **38** லட்சம் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு **15** லட்சம் மாணாக்கர்களுக்கு கொடுக்க இருக்கிறோம்.

குடிநீர் பிரச்சினையே இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலமாக நடவடிக்கை எடுத்தார்கள். அந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக இன்றைக்கு அம்மாவினுடைய அரசும், குடிநீர் பிரச்சினை இருக்கும் இடங்களிலெல்லாம், அதற்குத் தேவையான நிதிஒதுக்கீடு செய்து, கூட்டுக்குடிநீர் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இப்பொழுது சேலம் மாவட்டத்தில் கூட தினந்தோறும் குடிநீர் வழங்கவேண்டும் என்ற நோக்கில், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் வாயிலாக, அதற்குத் தேவையான 110 கோடி ரூபாயை ஒதுக்கி, பழைய குழாய்களையெல்லாம் மாற்றியமைத்து தங்குதடையில்லாமல் சேலம் மாவட்ட மக்களுக்கு தண்ணீர் வழங்க விரைவில் அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அம்மா அளித்த வாக்குறுதியான அம்மா இருசக்கர வாகன திட்டத்தை தொடர்ந்து அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது. பணிக்குச் செல்கின்ற மகளிருக்கு மானிய விலையிலே இருசக்கர வாகனங்களை அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

அம்மா இருக்கின்றபொழுது எப்படி விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்களோ, அதேபோல, அம்மாவினுடைய அரசும் விலைவாசி உயராமல் ஏழை, எளிய மக்களை பாதுகாத்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

சுகாதார வசதியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதன்மையாக இருக்கிறது. இரண்டு கைகளும் இல்லாத ஒருவருக்கு, இறந்த ஒருவருடைய இரண்டு கைகளையும் எடுத்து பொறுத்தி, ஒரு வரலாற்று சாதனையை படைத்துள்ளனர் தமிழ்நாடு அரசு மருத்துவமனை மருத்துவர்கள். மேலும், தனியார் மருத்துவமனைக்கு இணையாக நமதும் அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றோம். இதெல்லாம் அம்மாவின் அரசு செய்த சாதனை என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் வழங்கப்படுகிறது. கூட்டுப் பண்ணைத் திட்டத்தின் மூலமாக விவசாயிகள் செய்கின்ற விளைச்சலை பெருக்கவேண்டும் என்ற நோக்கில் அம்மா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, பால் உற்பத்தியில் தன்னிறைவை பெற்றிருக்கின்றோம், அந்தளவிற்கு பால் உற்பத்தியாளர்களுக்கு அம்மாவினுடைய அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக ஏழை எளிய சிறு, குறு விவசாயிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் கொடுத்திருப்பதன் மூலமாக இன்றைக்கு பால் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கிராமங்களில் வாழ்கின்ற விவசாய பெண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் வளர்ப்பதற்கு கோழிகள், கோழிக்குஞ்சு கொடுக்கின்றோம்.

கிராமப்புற காய்கறி வளர்ப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக அம்மாவுடைய அரசு திட்டம் தீட்டி, மக்களுக்கு கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றிற்கு தேவையான விதைகளை கொடுக்கின்றோம்.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களின் வாயிலாக தமிழகம் வளர்ச்சி பெற வேண்டும், தமிழக மக்களுக்குத் தேவையான திட்டங்கள் கிடைக்க வேண்டும், கடைக்கோடியில் இருக்கின்ற சாதாரண ஏழைக்குக் கூட அரசாங்கத்தினுடைய திட்டங்கள் சென்று சேருகின்ற அளவிற்கு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தமிழகம் முழுவதும் பல்வேறு உயர்மட்டப் பாலங்கள், சாலைகள் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம், கூட்டுக் குடிநீர்

திட்டம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம், புதிய மருத்துவமனைகள் திறப்பு விழா செய்து கொண்டிருக்கின்றோம், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம், வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற பழங்கள், காய்கறிகளை பாதுகாக்க குளிர்பதன கிடங்குகள் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இப்படி அனைத்துத் துறைகளும் வளர்ந்து இந்தியாவிலேயே தமிழகம் சிறந்து விளங்குகின்றது என்ற நல்ல பெயரை எடுப்பதற்கு இரவு, பகல் பாராமல் அம்மாவினுடைய அரசு பாடுபடும். மக்களுடைய நல்லாதரவை பெறும் என்று சொல்லி, மிகச் சிறப்பாக, குறுகிய காலத்திலே இந்தப் பாலத்தை கட்டிக் கொடுத்த நிறுவனத்திற்கும், இங்கே மிகத் திரளாக காலையிலிருந்து என்னை வரவேற்று மகிழ்ந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், குறிப்பாக மகளிர் அணியைச் சேர்ந்த சகோதரிகளுக்கும், சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த கழக முன்னோடி நிர்வாகிகளுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு.வெங்கடாசலம் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், முன்னால் சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்,

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**